பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 05 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நக்ஸலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படையினர் திறம்பட செயலாற்றி வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

2. ஜம்மு-கஷ்மீருக்கு சுற்றுலாப் பணிகள் வருகையை அதிகரிக்க மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் ஏற்றுமதி கடந்த மாதத்தில் 12 புள்ளி 7 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. வடகிழக்குப் பகுதியின் மேம்பாட்டுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து செயல்படுவதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

5. ஸ்லோவேக்கியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Prarthana Thombare –** நெதர்லாந்தின் **Arianne Hartono** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

நக்ஸலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படையினர் திறம்பட செயலாற்றி வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சத்தீஸ்கட் மற்றும் தெலங்கானா எல்லையில் நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளின்போது காயமடைந்து, தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பாதுகாப்புப் படையினரை நேற்று அவர் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

பின்னர் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் நக்சல் தீவிரவாதத்தை ஒடுக்குவதில் நமது பாதுகாப்புப் படையினர் துணிச்சலுடன் செயல்பட்டு வருவதாகக் கூறியுள்ளார்.

அவர்ளது நலனை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்று திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாகாலாந்து மாநில வேளாண்துறை வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

மாநிலத்தில் 338 கோடி ரூபாய் மதிப்பிலான வேளாண் வளர்ச்சித் திட்டங்களை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

வேளாண் துறைக்கான புத்தொழில் வாய்ப்புகளை அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக அவர் கூறினார்.

நாகாலாந்தில் இயற்கை விவசாயத்தை மேம்படுத்த மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய நாகாலாந்து ஆளுநர் திரு. இல. கணேசன், மாநிலத்தில் கால்நடை மற்றும் விவசாயத்துறை வளர்ச்சிக்கு மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

வேளாண்துறையில் நவீன அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்றும் திரு. இல. கணேசன் வலியுறுத்தினார்.

<<<<>>>>

ஆஃப்கனிஸ்தானின் வளர்ச்சிக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. மவுல்மி அமீர் கான் முத்தகி உடன் நேற்று அவர் தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவுக்கும் - ஆஃப்கனிஸ்தானுக்கும் இடையே கருத்து வேறுபாடுகளை உருவாக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வெற்றி பெறாது என்று ஆஃப்கன் அமைச்சர் கூறியதாக தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது குறித்து இந்த ஆலோசனையின்போது விவாதிக்கப்பட்டதாக திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீருக்கு சுற்றுலாப் பணிகள் வருகையை அதிகரிக்க மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீநகர் விமான நிலையத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 5 ஆண்டுகளில் கஷ்மீரில் சுற்றுலாத்துறை தொடர்ந்து மேம்பட்டு வந்ததாத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் மட்டும் ஸ்ரீநகர் விமான நிலையத்திற்கு 45 லட்சம் விமானப் பயணிகளின் வந்ததாக அவர் கூறினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து கஷ்மீரின் சுற்றுலா சற்று பாதித்துள்ளதாகவும், இதனை சரிசெய்ய விமானப் போக்குவரத்துத் துறை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<>>>>

வடகிழக்குப் பகுதியின் மேம்பாட்டுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து செயல்படுவதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

திரிபுராவில் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் நேற்று அவர் பங்கேற்றார்.

வளர்ச்சித் திட்டங்களை விரைவாக மேற்கொள்வது குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதாக சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு உறுதிபூண்டுள்ளதாக திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் ஏற்றுமதி, முந்தைய ஆண்டு ஏப்ரல் மாதத்தை ஒப்பிடுகையில், கடந்த மாதத்தில் 12 புள்ளி 7 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சரக்குகள் ஏற்றுமதி கடந்த மாதத்தில் 38 புள்ளி நான்கு ஒன்பது பில்லியன் டாலராக இருந்தது எனவும், சேவைகள் ஏற்றுமதி 35 புள்ளி மூன்று ஒன்று பில்லியன் டாலராக இருந்தது எனவும் வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மின்னணுப் பொருட்கள், பொறியியல் சாதனங்கள், கடல்சார் பொருட்கள், மருந்துப் பொருட்கள் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதி பெரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

தீவிரவாதத்தை ஒழித்து அமைதியை நிலைநாட்டுவதில் இந்தியா தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டு வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் மறைந்த முன்னாள் குடியரசு துணைத்தலைவர் பைரோன் சிங் ஷெகாவத் நினைவு நூலகத்தை நேற்று அவர் திறந்து வைத்தார்.

தீவிரவாதம் உலகளாவிய அச்சுறுத்தலாக உள்ளதாக கூறிய அவர், எல்லைக்கு அப்பால் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது இந்தியா துல்லிய தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

நம் நாட்டின் பாதுகாப்புப் படைகளின் திறன்கள் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக திரு. ஜக்தீப் தங்கர் கூறினார்.

<<<<>>>>

தீவிரவாதத்திற்கு எதிராக உலகம் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்ற தலைவராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ள திரு. **Milton Dick**-கிற்கு தொலைபேசி மூலம் நேற்று அவர் வாழ்த்து தெரிவித்தார்.

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் இந்தியாவுக்கு ஆஸ்திரேலியா அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்ததாக திரு. ஓம் பிர்லா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

<<<<>>>>

உள்நாட்டு விளையாட்டுகளை ஊக்குவிக்க மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா நிகில் கட்சே கூறியுள்ளார்.

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழாவில் பேசிய அவர், கபடி மற்றும் கோ-கோ விளையாட்டுகளை சர்வதேச அளவில் பிரபலப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டி வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க சிறந்த தளமாக அமைந்துள்ளது என்று திருமதி ரக்‌ஷா நிகில் கட்சே தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் விமானப் போக்குவரத்து உள்கட்டமைப்புகளை மேம்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு. முரளிதர் மொஹல் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிராவின் கோலாப்பூர் விமான நிலையத்தில் மேம்பாட்டுப் பணிகளை அவர் நேற்று தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், நாட்டில் விமான நிலையங்கள் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

விமான நிலையங்கள் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு வருவதாக திரு. முரளிதர் மொஹல் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் வடகிழக்குப் பகுதியின் சில இடங்களில் அடுத்த 3 நாட்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா உள்ளிட்ட தென் மாநிலங்களின் ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

பீஹார், கிழக்கு உத்தரப்பிரதேசம், மேற்கு ராஜஸ்தான் ஆகிய பகுதிகளின் சில இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

துருக்கி நிறுவனம் ஒன்றுக்கு இந்தியாவில் அளிக்கப்பட்ட பாதுகாப்பு அனுமதியை விமானப் போக்குவரத்து பாதுகாப்பு அமைப்பு ரத்து செய்துள்ளது.

9 விமான நிலையங்களில் இந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து நடைபெற்ற ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாகிஸ்தானுக்கு ஆதரவாக துருக்கி செயல்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனிடையே துருக்கி பல்கலைக்கழகத்துடனான ஒத்துழைப்பை நிறுத்தி வைப்பதாக ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஸ்லோவேக்கியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Prarthana Thombare –** நெதர்லாந்தின் **Arianne Hartono** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 3-6, 11-9 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் **Elina –** யுக்ரைனின் **Valeriya** இணையை வென்றது.

----------------

போஸ்னியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aryan Lakshmanan -** இத்தாலியின் **Gabriele Maria Nose** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 6-3 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் **Maxi Milian – Michel Hopp** இணையை வென்றது.

-------------

இங்கிலாந்துக்கு எதிரான கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹர்மன் ப்ரீத் கவுர் தலைமையிலான இந்த அணியில், ஸ்மிருதி மந்தானா, ஜெமீமா ரோட்ரிகஸ் உட்பட 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.

3 ஒருநாள் போட்டி மற்றும் 5 ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டிகளைக் கொண்ட இந்த தொடர், இங்கிலாந்தில் ஜூன் 28ஆம் தேதி தொடங்கி ஜூலை 22ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

**<<<<The End>>>>**